2014 ஜூலை 21]
205—

புதிய வட்டம்

***7106—திரு. சுப. தங்கவேலன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து கிழக்கரையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கீழக்கரையைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்குதல் தொடர்பாக உயர்மட்டக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. முன்மொழிவுகள் பெறப்பட்டவுடன் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப. தங்கவேலன் அவர்கள்.*

திரு. சுப. தங்கவேலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரை நகராட்சியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிதாக ஒரு வட்டாட்சியர் அலுவலகம் ஏற்படுத்தித் தர வேண்டுமென அப்பகுதி மக்கள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். இது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரையில் உயர்மட்டக் குழு பரிசீலித்து வருவதாகவும், அரசுக்கு முன்மொழிவுகள் பெறப்பட்டவுடன் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்திருக்கின்றார்கள். கீழக்கரையில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் விரைவில் உதயமாகுமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

[2014 ஜுலை 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் சேவையை மேம்படுத்தவும், மக்களுக்கு விரைவான சேவையை அளிக்கவும், வருவாய்த் துறையை மக்கள் எளிதில் அணுகவும் முன்மாதிரியான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசு எடுத்து வருகிறது. மேலும், பொதுமக்கள் வருவாய்த் துறையை எளிதில் அணுகிட, மக்கள்தொகை மற்றும் நிலப் பரப்பின் அடிப்படையில் வட்டங்கள் மற்றும் வருவாய்க் கோட்டங்கள் பிரிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்கள் பிரிப்பது தொடர்பாக மக்கள்தொகை, பரப்பளவு மற்றும் வருவாய்க் கிராமங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறையினால் 9—6—2003—ல் அளவுகோல் நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி புதிய வட்டம் உருவாக்க குறைந்த அளவு 250 சதுர கிலோ மீட்டர் முதல் அதிகளவு 2,000 சதுர கிலோ மீட்டரும், மக்கள்தொகையைப் பொறுத்தமட்டில், குறைந்த அளவு ஒரு இலட்சம் முதல் அதிகளவு 5 இலட்சத்து 50 ஆயிரம் வரையும், வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை குறைந்த அளவு 30 கிராமங்களும் இருத்தல் வேண்டும்.*

முற்பகல் 10—50

வட்டங்கள் பிரிக்கப்படுவதால் அரசுக்கு ஏற்படக்கூடிய கூடுதல் செலவினங்கள், தொடரும் செலவினமாக ரூபாய் 2.21 கோடியும், தொடராச் செலவினமாக ரூபாய் 2.42 கோடியும், ஆகமொத்தம் ரூ.4.63 கோடி கூடுதல் செலவினம் ஏற்படுகிறது. இருப்பினும் தாயுள்ளம் கொண்டிருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110—ன்கீழ் அறிவித்தவாறு அரசு ஆணை (2D) எண் 176/வருவாய், நாள் 15—6—2012—ல் 4 இலட்சத்திற்கும் மேல் மக்கள்தொகையினைக் கொண்ட வருவாய் வட்டங்களைப் பிரிக்கவும், இதனை நிறைவேற்றும்பொருட்டு தமிழகத்தில் உள்ள வருவாய் வட்டங்களின் மக்கள்தொகை, பரப்பளவு, வருவாய் கிராமங்கள் ஆகியவற்றினைக் கணக்கிலே கொண்டு அரசுக்குப் பரிந்துரை அளிக்க முதன்மைச் செயலாளர், வருவாய் நிருவாக ஆணையர், முதன்மைச் செயலாளர், நில நிருவாக ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர், நில சீர்திருத்த ஆணையர் ஆகிய மூன்று

உயர் அலுவலர்களைக் கொண்ட அலுவலர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் புதிய வட்டங்களை உருவாக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய புனித அரசால் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையிலே 2012—2013 ஆம் நிதியாண்டில் நாமக்கல் மாவட்டத்திலே கொல்லிமலை, சிவகங்கை மாவட்டத்திலே திருப்புவனம், விழுப்புரம் மாவட்டத்திலே சின்னசேலம், காஞ்சிபுரம் மாவட்டத்திலே திருப்போரூர், பெரம்பலூர் மாவட்டத்திலே ஆலத்தூர், கோயம்புத்தூர் மாவட்டத்திலே கிணத்துக்கடவு, அன்னூர், ஈரோடு மாவட்டத்திலே அந்தியூர், திருவண்ணாமலை மாவட்டத்திலே கலசப்பாக்கம் ஆகிய 9 வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

2013—2014 ஆம் நிதியாண்டில் வேலூர் மாவட்டத்திலே அணைக்கட்டு, நாட்ராம்பள்ளி, கரூர் மாவட்டத்திலே மண்மங்கலம், திருவள்ளூர் மாவட்டத்திலே திருவொற்றியூர், மதுரவாயில், திருப்பூர் மாவட்டத்திலே திருப்பூர் தெற்கு, ஊத்துக்குளி, கடலூர் மாவட்டத்திலே வேப்பூர், தஞ்சாவூர் மாவட்டத்திலே பூதலூர், விழுப்புரம் மாவட்டத்திலே விக்கிரவாண்டி, கோயம்புத்தூர் மாவட்டத்திலே பேரூர், மதுக்கரை, திண்டுக்கல் மாவட்டத்திலே திண்டுக்கல் கிழக்கு, மதுரை மாவட்டத்திலே திருப்பரங்குன்றம், மதுரை மேற்கு, மதுரை கிழக்கு, சென்னை மாவட்டத்திலே புரசைவாக்கம், அயனாவரம், அமைந்தகரை, வேளச்சேரி, கிண்டி, சேலம் மாவட்டத்திலே சேலம் மேற்கு, சேலம் தெற்கு, (மேசையைத் தட்டும் ஒலி) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலே திருச்சிராப்பள்ளி கிழக்கு, மருங்காபுரி என 25 புதிய வட்டங்கள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட 9 வட்டங்களோடு சேர்த்து மொத்தம் 34 புதிய வட்டங்களை உருவாக்கி வரலாறு படைத்திருப்பவர் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், முன் எப்போதும் இல்லாத வகையில் ஒவ்வொரு வருவாய் கிராமம் வாரியாக தமிழகம் முழுவதும் உள்ள 16,710 வருவாய் கிராமங்களுக்கும் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை வட்டாட்சியர் தலைமையில், வட்டாட்சியர் அலுவலகத்தையே ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் கொண்டுசென்று 33 இலட்சத்து 13 ஆயிரத்து 792 மனுக்களுக்கு உடனடித் தீர்வு கண்டிருக்கிற அம்மா திட்ட முகாமை வெற்றிகரமாக நடத்திக் காட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மக்கள் குறை தீர்க்கும்

முகாமில் 33 இலட்சத்து 13 ஆயிரத்து 792 பேர் பங்கேற்று, ஒருவருடைய மனுவும் நிலுவையில் இல்லாமல் உடனடித் தீர்வு காணப்பட்டது. மக்கள் குறைதீர்க்கும் இந்த முகாம் இந்தியாவிலேயே அம்மா திட்ட முகாம் என்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நிருவாகப் புரட்சியினை நிகழ்த்திக் காட்டியிருப்பவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது உள்ள இராமநாதபுரம் வட்டத்தில் 7 உள் வட்டங்கள் அடங்கியுள்ளன. இதில் கீழக்கரை ஒரு உள் வட்டம் ஆகும். இராமநாதபுரம் மற்றும் கடலாடி உள் வட்டங்களைச் சீரமைத்து, ஒரு புதிய வட்டம் அமைக்கலாம். ஆனால், தற்போது உள்ள இராமநாதபுரம் வட்டம் 75 ஆயிரத்து 477 சதுர கிலோ மீட்டர் பரப்பளவும், மக்கள்தொகையில் 4 இலட்சத்து 14 ஆயிரத்து 870 நபர்களையும், வருவாய் கிராமங்களின் எண்ணிக்கையில் 67—ஐயும் கொண்டுள்ளது. தற்போதுள்ள கடலாடி வட்டம் 585.54 சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும், மக்கள்தொகையில் ஒரு இலட்சத்து 44 ஆயிரத்து 386 நபர்களைவும், வருவாய் கிராமங்களின் எண்ணிக்கையில் 45—ஐயும் கொண்டுள்ளது. தற்போதுள்ள இராமநாதபுரம் மற்றும் கடலாடி வட்டங்களைச் சீரமைத்து, உத்தேசிக்கப்படும் கீழக்கரை வட்டம் புதிதாகத் தோற்றுவிக்கப்படுமாயின், அது பரப்பளவில் 309.29 சதுர கிலோ மீட்டரையும், மக்கள்தொகையில் ஒரு இலட்சத்து 40 ஆயிரத்து 192—ஐயும், 26 வருவாய் கிராமங்களையும் கொண்டதாக இருக்கும். எஞ்சியுள்ள இராமநாதபுரம் வட்டம் 478.94 சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும், மக்கள்தொகையில் 2 இலட்சத்து 89 ஆயிரத்து 945—ஐயும், 43 வருவாய் கிராமங்களையும் கொண்டதாக இருக்கும்.

எஞ்சியுள்ள கடலாடி வட்டம் 552.08 சதுர கிலோ மீட்டர் பரப்பளவையும் மக்கள்தொகையில் ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 120 நபர்களையும், 43 வருவாய் கிராமங்களையும் கொண்டதாக இருக்கும். ஆனால், உத்தேசிக்கப்படும் கீழக்கரை வட்டம், அரசு ஆணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9—6—2009—ல் கிராமங்களின் எண்ணிக்கை என்ற காரணியைப் பொறுத்தவரையில் நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலைப் பூர்த்தி செய்யவில்லை. எனினும், இராமநாதபுரம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, கீழக்கரையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்கப்படுமா என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின்

2014 ஜூலை 21]

கோரிக்கையை, எல்லோரையும் வாழ வைக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

206—

தரம் உயர்த்துதல்

***5077—திரு. கொ.எ. கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, வள்ளுவர்புரம், பெரியபணமுட்லு, சூலாமலை, மேட்டுப்புலியூர் ஆகிய பகுதிகளிலுள்ள அரசு நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தொகுதிக்குட்பட்ட பெரியபணமுட்லு, சூலாமலை மற்றும் மேட்டுப்புலியூர் ஆகிய இடங்களில் செயல்படும் அரசு நடுநிலைப் பள்ளிகள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் 2011 ஆம் கல்வியாண்டிலேயே அரசு உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு தற்போது சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள வள்ளுவர்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைத் தரம் உயர்த்துவதற்கு அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் நிறைவு செய்யப்படாததால் அதனை உயர்நிலைப் பள்ளியாகத் தரம்